இன்றைய நாகரீகத்தின்
நவீன முன்னோடிகள்
ராக மாலிகா
ஆடை அகம்
3, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

# உதயன்

விலை ரூபா 5-00

சிறுவர்கள் முதல்
பெரியோர் வரை
நாட வேண்டிய
ஒரே ஸ்தாபனம்
ராக மாலிகா
ஆடை அகம்
3, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 24 வியாழக்கிழமை (09 – 12 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 13

# ஸ்ரீலங்கா அரசை கண்டித்து சர்வதேச ரீதியில் பிரசாரம்

## ஆளுமைமிக்க ஒருவரை நியமிக்க தொண்டர் கூட்டமைப்பு ஏற்பாடு

கொழும்பு, டிசம்பர் 9

ஸ்ரீலங்கா அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுத்துள்ள நிலைப்பாட்டைக் கண்டித்து சர்வதேச ரீதியில் பிரசாரம் செய்யப்படவுள்ளது.

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் கூட்டமைப்பு ஒன்று, இது சம்பந்தமான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதற்கு ஆளுமை நிறைந்த வெளிநாட்டவர் ஒருவரை நியமிக்க கூட்டமைப்பு ஏற்பாடு செய்யவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இக்கூட்டமைப்பின் கூட்டம் ஒன்று அண்மையில் கொழும்பில் நடைபெற்ற போது முன்கண்ட முடிவு எடுக்கப்பட்டதாக ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டுள்ளது

இந்தக் கூட்டமைப்புக்கு ஐரோப்பா மற்றும் நோர்வேயின் ''நொவிப்'' அமைப்பினாலும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது.

நியமிக்கப்படும் வெளிநாட்டுப் பிரஜை மேற்குநாடு ஒன்றின் தலைநகரில் இருந்து செயற்படுவார் என்றும் —

ஸ்ரீலங்கா அரசாங்கத்தை ஆதரிப்பதற்கு எதிராக இலங்கைக்கு உதவும் நாடுகள் மற்றும் உதவும் நிறுவனங்கள் மத்தியில் இவர் ஆதரவு திரட்டுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தமது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒழுங்கு நடவடிக்கை தொண்டா மீது இல்லை

### ஐ. தே. க. தலைமைப்பீடம் முடிவு

அமைச்சர் தொண்டமான் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது பற்றி ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடம் இன்னும் சிந்திக்கவே இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''தி ஐலண்ட்'' பத்திரிகை இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

தொண்டமானுடனான பிரச்சினைகளுக்குக் சுமுக தீர்வு காணுவதிலேயே ஆளும் கட்சியின் நிறைவேற்று தலைவர்கள் இன்னும் முயற்சித்து வருகின்றனர் என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முயற்சி தோல்வி காணும் பட்சத்தில் மத்திய மாகாண சபையில் எதிர்க்கட்சிகளுக்கு இ. தொ. கா. ஆதரவளிக்கும் நிலை உருவானால் கூட, தொண்டமான் மீது ஆளும் கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கமாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

## குருநகர்ப் பகுதி நோயாளி விமான மூலம் கொழும்புக்கு

வடமராட்சி, டிச. 9

மூளை நரம்பு வியாதியினால்பாதிக்கப்பட்டநோயாளி ஒருவர் நேற்று விமானம் மூலம் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

குருநகரைச் சேர்ந்த இ. செபஸ்தியம்பிள்ளை என்ற நோயாளியே விமானம் மூலம் கொழும்புக்குக் கூட்டிச் செல்லப்பட்டார்.

இவருடன் மூளை, நரம்பியல் டாக்டர் திருமதி எம்.கே.ஓ. நீக்கிலாபிள்ளையும் செல்கிறார். (ஒ-173)

## ஜி. சீ.ஈ பரீட்சை வினாத்தாள் 2 ஆவது தொகுதியும் வந்தது

யாழ்ப்பாணம், டிச. 9

தற்சமயம் நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ (சாதாரண) தரப் பரீட்சைக்கான மற்றொரு தொகுதி வினாத்தாள்கள் நேற்று வந்து சேர்ந்தன.

விமான மூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட்ட இந்த வினாத்தாள்கள் காங்கேசன் துறையில் இருந்து 'வாதுவ' கப்பலில் பருத்தித்துறைக்கு நேற்று நண்பகல் எடுத்து வரப்பட்டன.

யாழ். வடக்கு வலயப் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி பருத்தித்துறையில் வைத்து அவற்றைப் பொறுப்பேற்றார். (ஒ-3-111-17)

## தனிப்பட்ட பரீடசார்த்திகள் பெறுபேறு தபாலில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், டிச. 9

1993 ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுத் தபாலில் சேர்க்கப்பட்டன.

இதேவேளை —

பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை பாடசாலை அதிபர்கள் புவித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் —

வடமராட்சிக் கோட்டத்துள் அடங்கும் பாடசாலைகளின் அதிபர்கள் தமது பெறுபேறுகளை வடமராட்சிக் கோட்ட கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் — யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (த)

## அத்வானி உட்பட எண்மர் தொடர்ந்து காவலில்!

புதுடில்லி, டிச. 9

பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்களான எல் கே. அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, கல்யாண் சிங் உட்பட எட்டுப் பேர்களையும் இம்மாதம் 20 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்கும்படி லக்னோ நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கடந்த ஆண்டு டிசம்பர் 6 ஆம் திகதி அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு சூழ்ச்சி செய்தது என்ற குற்றச்சாட்டின் மீது, இவர்களை பிணையில் செல்லும்படி நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

பிணையில் செல்ல இவர்கள் அனைவரும் மறுக்கவே அவர்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். (ஒ-எ)

## தமிழ்,முஸ்லிம் கட்சிகளுக்கும் சுதந்திரக் கட்சி அழைப்பு

### நவசமசமாஜக்கட்சி நிராகரிப்பு

கொழும்பு டிச. 9

தொடர் பிரசாரக் கூட்டங்களில் பங்குபற்றும் படி ஏனைய சிங்கள, தமிழ், முஸ்லிம் எதிர்க் கட்சிகளை சுதந்திரக் கட்சி அழைத்துள்ளது.

இந்த அழைப்பை நவ சம சமாஜக் கட்சி நிராகரித்து விட்டது.

யுத்தத்தை வலியுறுத்தி, அரசியல் தீர்வு பற்றி பேசுவது வஞ்சகத்தனமான நடவடிக்கை என்று நவ சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்னா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிரி சேனநாயக்காவுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் இந்த நடவடிக்கை அரசின் யுத்த நடவடிக்கையை மேம்படுத்துவதாக இருக்கும் என்றும் நவ சமசமாஜக் கட்சி கருதுவதாகவும் பி. டி. ஐ தெரிவித்தது.

இதேவேளை —

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி

அம்மணி பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுறதிலை வலு கெட்டிக்காரி பாருங்கோ...!

## கிளாலிச் சேவை தொடர்ந்து நடக்கும்

யாழ்ப்பாணம், டிச. 9

கிளாலி – பூநகரிப் படகுச் சேவை இன்று முதல் மறு அறிவித்தல் வரை தொடர்ந்து வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர் (ஒ-3)

## கல்முனை கடற்பகுதியில் தரித்து நிற்கும் கப்பல்கள்!

யாழ்ப்பாணம், டிச. 9

பூநகரி — கல்முனை, பெரியவேலி கடற்பகுதியில் மிகத் தொலைவில் கடற்படைக் கப்பல்கள் தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தக் கப்பல்களைச் சுற்றி கடற்படையினரின் பிரங்கிப் படகுகள் ரோந்து சுற்றி பாதுகாப்பு அளித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கப்பல்கள் தொலைவில் தரித்து நிற்பதை பாஷையூர்ப் பகுதியில் இருந்து அவதானிக்க முடிந்தது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஒ-5-17-81)

## யாழ். நகர், கோண்டாவிலில் நேற்றிரவு ஷெல் குண்டுகள்

### பாதுகாப்பு பிரதேசத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், டிச. 9

நேற்றிரவு 8.15 மணியளவில் படையினர் நடத்தி திடீர் ஆட்லறி ஷெல் தாக்குதலில் யாழ். நகர் மற்றும் கோண்டாவில் பகுதிகளில் இருவர் காயமடைந்தனர்.

யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு பிரதேசத்தினுள் — யாழ். மணிக் கூண்டு வீதியில் உள்ள மகாத்மா ஒழுங்கைக்குச் சமீபமாக — வீடு ஒன்றின் மீது — ஷெல் விழுந்து வெடித்ததில் வீட்டில் இருந்த மார்க்கண்டு மகேஸ்வரி (வயது 35) என்ற குடும்பப் பெண் காயமடைந்தார், மேல் வீட்டின் மீதே ஷெல் விழுந்து வெடித்தது. அங்கிருந்த பலர் தெய்வாதீனமாகத் தப்பிக் கொண்டனர்.

மற்றொரு ஷெல் கோண்டாவில் ரயில் நிலைய வீதி பக்கமாக, அரசடிப் பிள்ளையார் கோவில் பகுதியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் குடாநாட்டில் பெரியளவில் வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், டிச. 9

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி. சீ. ஈ உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகள் யாழ். குடாநாட்டில் நேற்று வெளியிடப்பட்டன.

இம்முறை பரீட்சைப் பெறுபேறுகள் திருப்திகரமாக இல்லை என்றும், பெரு வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் கல்வி வட்டாரங்கள் சுவைல தெரிவித்தன.

கொழும்பிலிருந்து விமான மூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்ட பெறுபேறுகள் அடங்கிய பொதிகள் காங்கேசன் துறையிலிருந்து ''வாதுவ'' கப்பலில் நேற்றுக் காலை பருத்தித்துறை கொண்டு வந்து சேர்க்கப்பட்டன.

பெறுபேறுகள் நேற்று நண்பகலில் யாழ். கல்வி அலுவலகத்துக்கு எடுத்து வரப்பட்டன. தொலைவிடங்களில் உள்ள பாடசாலை அதிபர்களில் பலர் நேற்று 3 மணி வரை பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள யாழ். கல்வி அலுவலகத்துக்கு வரவில்லை.

இம்முறை 4 ஏ பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மூன்று மாணவர்களும், ஹாட்லிக் கல்லூரியில் ஒரு மாணவனும், கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஒரு மாணவனும் 4 ஏ தரத்தில் சித்தி பெற்றனர்.

வைத்தியம் — உயிரியல் விஞ்ஞானத் துறையில் — எந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விமான இரைச்சலைகேட்டு வெளியே ஓடும் ஊழியர்கள்

யாழ்ப்பாணம், டிச.9

விமான இரைச்சலைக் கேட்டதும் பாதுகாப்புத் தேடி வெளியே ஓடுகிறார்கள் யாழ். செயலக ஊழியர்கள்!

செயலகப் பகுதி மீது எந்நேரமும் விமானப் படையினர் குண்டு வீசு நடத்தலாம் என ஊழியர்கள் அஞ்சுவதே காரணம் ஆகும்.

நேற்று அடிக்கடி விமானங்கள் பறந்ததால், ஊழியர்கள் சில மணி நேரம் வெளியில் செல்லுதை அவதானிக்க முடிந்தது. (ஒ-100)

## மத்திய மாகாண முதலமைச்சர் பதவி:

# காமினியை ஆதரிப்பதாக தொண்டமான் அறிவிப்பு

### அவர் யதார்த்தமான அரசியல்வாதி என்கிறார்

கொழும்பு, டிச. 9

மத்திய மாகாண முதலமைச்சர் பதவிக்கு ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணித் தலைவர் காமினி திசாநாயக்காவைத் தாம் ஆதரிப்பதாக இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் சேருவதற்கு காமினி முயற்சித்தார். அப்படியானவர் நம்பக்கூடிய அரசியல் நண்பரா? - என்று ''சண்டே ரைம்ஸ்'' செய்தியாளர் கேட்டதற்கு —

தொண்டமான் பின்வருமாறு கூறினார்:-

மூழ்கிக்கொண்டிருக்கும் ஒருவர் உயிர்தப்ப ஒரு சிறுதுரும்பைக்கூட பிடிக்கத்தான் முயற்சிப்பார். காமினி ஒரு யதார்த்தமான அரசியல்வாதி. அவரின் இடத்தில் இருக்கும் எவரும் அவர் போன்றுதான் நடந்திருப்பர். அப்படி அவர் நடந்துகொண்டதில் பிழை எதும் இல்லை.

காமினி இளைஞர், திறமையானவர், திடசித்தம் கொண்டவர். ஆகவே தம்மை அரசியல் ரீதியில் கட்டி எழுப்ப அவர் விரும்புவது இயற்கையே. சரியான அரசியல் பாதையில் செல்ல அவர் முயற்சிக்கிறார். அதில் என்ன தவறு உண்டு?

எனது அபிப்பிராயத்தின்படி காமினி வளமுள்ள அரசியல்வாதி. அவருக்கு உதவுவதாக நான் வாக்குறுதி அளித்துவிட்டேன். மத்திய மாகாண சபையில் அவருடன் இணைந்து நான் செயற்படுவேன்'' — என்றும் திரு. தொண்டமான் கூறினார்.

## ஹெலி நோட்டம்

நேற்றுக் காலை 7.45 மணியளவில் ஹெலி ஒன்று யாழ். நகர் மற்றும் கரையோரப் பகுதிக்கும் நகரப் பகுதிக்கும் மேலாக பலதடவைகள் சுற்றி நோட்டமிட்டது.

சுமார் 15 நிமிட நேரத்துக்கு மேலாக ஹெலி வட்டமிட்டதால் அந்தப் பகுதிகளில் மக்கள் பதற்றமடைந்தனர். (ஒ-51-17)

## சூறாவளிக்கு 157 பேர் பலி

பிலிப்பீன்ஸில் வீசிய இரண்டு சூறாவளி காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 157 ஆக அதிகரித்தது

இரண்டரை லட்சம் மக்கள் வீடிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரக் கோரி

# நாடெங்கும் பேரணி, கூட்டங்கள் நடத்த சுதந்திரக் கட்சி ஏற்பாடு

கொழும்பு, டிச. 9

நீண்ட காலமாக இழுபட்டு வரும் வடக்கு மெக்கு யுத்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருமாறு அரசாங்கத்தை வற்புறுத்தும் நோக்கத்துடன் அடுத்த வாரம் முதல் நாடு எங்கும் தொடர் பேரணிகளையும் பொதுக் கூட்டங்களையும் நடத்துவதற்கு சுதந்திரக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு அறிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது:-

நாட்டை யுத்த நிலையிலேயே அரசு வைத்து உள்ளது. அரசு மக்களில் நம்பிக்கை வைத்து அவர்களுக்கு உண்மையைத் தெரிவிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் தீவிரவாத மிரட்டலை ஒடுக்க ஜனாதிபதி விஜேதுங்கா தவறிவிட்டார்.

இனப்பிரச்சினைக்கு ஜனாதிபதி விஜேதுங்காவிடம் அரசியல் தீர்வு எதுவும் இல்லை.

யுத்த முனையில் உள்ள படையினருக்கு அரசின் ஆதரவு கிடைப்பதாக இல்லை. இந்த யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கரிய சரியான தலைமைத்துவமும் வளமும் அரசினால் படையினருக்கு வழங்கப்படவில்லை

யுத்தத்தில் வெற்றியீட்டும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சிறிமாவோ நேற்று அறிவிப்பு

மேல் மாகாண முதலமைச்சருமான சந்திரிகா குமாரணதுங்காவும் நேற்றுக் கொழும்பில் கூட்டாகச் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்கள்.

திருமதி பண்டார நாயக்கா செய்தியாளர் மாநாட்டில் கூறியதாவது:-

இக்கூட்டத்தில் சுதந்திரக் கட்சியின் கொள்கைகளையும் எதிர்க்கட்சிகளை உரையாற்றுவர். (ஒ-5)

## முதலாவது கூட்டம் நுகேகொடையில் நடக்கும்

கொழும்பு, டிச. 9

வடக்கு - மெக்கு யுத்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருமாறு அரசாங்கத்தை வற்புறுத்தும் முதலாவது பொதுக்கூட்டம் இம்மாதம் 15 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கால் ஆர்மோனியம் விற்பனைக்குண்டு. தொடர்பு: நி. நிர்மலானந்தன், சன் சைன் மன்சன் (மாதர் சங்கம் முன்பாக), தித்தன்கேணி. (6844)

### மலிவு விற்பனை

மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இலவசமாக நோட்டவணை வழங்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (பி-6584)

### உடன் விற்பனைக்கு

3½ பரப்புக் காணியும், 7 அறைகளும் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. தனியாகவோ, இருவராகவோ வாங்கலாம். காலை 7 தொடக்கம் 10 மட்டும். மாலை 1 தொடக்கம் 6 வரை தொடர்பு கொள்ளலாம். 99, வெப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (6845)

### கோழிக்குஞ்சு விற்பனை

ஒரு மாதம் நிரம்பிய Prima Lohmaan Brown பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: இல. 29, சுவாட்ஸ் ஒழுங்கை (ஆசீர்வாதம் அச்சகம் முன்பாக), கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (28328)

### வீடு தேவை

பயிற்சி நிலையமாகப் பாவிப்பதற்குகந்த வீடு, வதிரிச் சந்திக்கு அருகாமையில் தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்: செயலாளர், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், வதிரி, கரவெட்டி. (28332)

### மருந்தாளர்களுக்கு

பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்களுக்கு ஓர் அமைப்பை ஆரம்பிப்பதற்கு ஆர்வமுள்ள மருந்தாளர்கள் தொடர்பு கொள்ளவும்: இல. 23, மே/பா உதயன் சேவை நிலையம், 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (6735)

### தொலைந்த பொருள்

யாழ். பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டியில் கடந்த 18-11-1993 ஆம் திகதியன்று ஒரு பவுண் மோதிரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் ஆதாரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: செ. தவமணி, வலி கிழக்கு, வடபகுதி ப. நோ. கூ. சங்கக் கிளை 18, ஆவரங்கால், புத்தூர். (28329)

## ரயில்வே ஊழியர் இடமாற்றம்

இலங்கை ரயில்வே த்திணைக்களம் அதிகார சபையாக மாற்றப்படுவதால், அதன் ஊழியர்கள் தாம் விரும்பும் இடங்களில் உள்ள திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பல தமிழ் ஊழியர்கள் இடமாற்றம் பெற்று வடக்கு - கிழக்கில் உள்ள அரச திணைக்களங்களுக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பலியானோர் 61

புயல் மற்றும் சுடும்மழை காரணமாக தமிழ் நாட்டில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 61 ஆக அதிகரித்தது.

## நியூ ரியூசன் செண்டர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

ஆண்டு -5 (1994) புலமைப் பரிசில் வகுப்பு ஆரம்பம்:

**11-12-1993**

கணிதம் — நயினை S. S. பிள்ளை

தமிழ் — திருவாசநாதன்

மாதம் தோறும் பரீட்சை நடைபெறும். (பி-6585)


# அரசின் எரிபொருள் தடைக்கு ஆக்கிவாயுத் திட்டம் சவால்

## விடுதலைப் புலிகள் பிரமுகர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிச. 9

எரிபொருள் தடையை விதித்து எம் மீது அழுத்தம் பிரயோகிக்க முயலும் அரசுக்கு சவாலாக எமது ஆக்கிவாயு செயற்திட்டம் அமைந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. சோழன் இப்படித் தெரிவித்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பகுதியினால் அறிமுகப்படுத்தப்பட்டு தற்சமயம் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ள ஆக்கிவாயு பிறப்பாக்கி செயற்திட்டம் தொடர்பாக நடந்த செய்தியாளர் மற்றும் பொதுசனத் தொடர்பு சாதனப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது திரு. சோழன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்காவில் வடபகுதியிலேயே அதிகளவு மண் எண்ணெய் பாவனைப்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே இறக்குமதி செய்யும் எண்ணெய்யைஎப்படியாவதுஇங்கு அனுப்பிவைக்க வேண்டிய அவசியம் அரசுக்கு உண்டு. ஆனால் அந்த எரிபொருளைப் பயன்படுத்தி அரசு தமிழ் மக்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிறது. அதனை இங்கு அனுப்ப நிபந்தனைகளை விதித்து வருகிறது. ஆனால் ஆக்கிவாயுப் பிறப்பாக்கி ஒன்று தமிழீழத்தில் வடிவமைக்கப்பட்டிருப்பதானது அரசின் அத்தகைய அனைத்து நடவடிக்கைகளுக்கும் பெரும் சவாலாக அமைந்து விட்டது — என்றார்.

மேற்படி ''ஆக்கி வாயு''வில் இருந்து இயந்திரங்கள், மின் சாதனங்கள் இயக்கப்படும் முறையை தாவடியில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பகுதியில் பெரும் எண்ணிக்கையானோர் பார்வையிட்டு வருகின்றனர்.

## லயனல் பொன்னாண்டோ வடக்கு-கிழக்கு விஜயம்

கொழும்பு, டிச. 9

வடக்கு - கிழக்குக்கு இவ்வாரம் விஜயம் செய்யவுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பொன்னாண்டோ சண்டே ரைம்ஸ் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தமது மனைவியுடன் சென்று வடக்கு-கிழக்கு மக்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவிருப்பதாகவும் அவர் கூறினார்.

''புதிய பணி எனக்கு ஒரு சவாலாக உள்ளது. தற்போது எனது சொந்த எண்ணங்களை வகைப்படுத்த வேண்டியுள்ளது'' — என்றும் அவர் கூறினார்.

ஆபத்துக்கான சாத்தியம் உண்டா என்று கேட்டகாலை — ''வாழ்வின் ஒரு பகுதியே ஆபத்துத்தான். எப்படியானாலும் பழக்கமானபிரதேசத்தில் நாம் இருப்போம்'' என்றும் அவர் சொன்னார். (இ-எ)

## முக்கிய அறிவித்தல்

சர்வதேச லயன்ஸ் கழகத்துக்குச் சொந்தமான புற்று நோய் நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டுப் புத்தகங்கள் யாழ். பெரியாஸ்பத்திரிக்கும் நட்டணம் பார்மசிக்குமிடையில் தவறிவிட்டன.

★ புத்தகங்களின் விபரம் பின்வருமாறு:

- புத்தக இலக்கம்: 065 முதல் 080 வரை
- சீட்டு இலக்கம்: A0641 முதல் A0800வரை

இச் சீட்டுக்கள் விற்பனையிலிருந்து விலக்கப்பட்டுள்ளன என்பதை அறியத் தருகின்றோம். இவற்றை கண்டெடுத்தவர்கள் பரணி பார்மசி 456, ஆஸ்பத்திரி வீதியில் ஒப்படைக்கவும்.

[பி-6669]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### திருமதி சிவபாக்கியம் இராமையா

தோற்றம்: 05 — 07 — 1910
மறைவு: 09 — 11 — 1993

அன்னார் சுகவீனமற்று இருந்த வேளையில் சகல வழிகளிலும் உதவி புரிந்த டாக்டர் முத்துக்குமாரசாமி, வில்லியம் ஹார்வே மருத்துவ மனையைச் சார்ந்த டாக்டர்கள், தாதிமார்கள், ஊழியர்கள், யாழ். போதனா வைத்தியசாலை நலன்புரிச்சங்க ஊழியர்கள் மற்றும் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டும், அனுதாபம் தெரிவித்தும் எங்கள் துயரத்தில் பங்கு கொண்ட அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

27/1, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (28327)

## 31ஆம் நாள் நினைவலைகள்



### அமரர் சுப்பையா அன்னம்மா

தோற்றம்: 01 — 01 — 1911 மறைவு 09 — 11 — 1993

எமது அன்புத் தெய்வமே!

எம்மை விட்டு நீங்கள் பிரிந்து சென்றாலும், உங்கள் நினைவோடு நாம் வாழ்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்

- குடும்பத்தினர்

35/1, G.P.S றோட், கல்லியங்காடு.

[28331]

## இன்று

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றம் நடத்தும் கருத்தரங்குத் தொடர் ஒன்று இன்று வியாழன் பிற்பகல் 3மணிக்கு பொருளியல் துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

அரங்கில் யாழ். பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ துறை பதில் தலைவர் பேராசிரியர் பாலகிருஷ்ணன் 'திறந்த பொருளாதாரமும் அபிவிருத்தியும்' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார். (த-87)

★ ★ ★

பாவலர் கல்வி தொடர்பான பயிற்சி ஆய்வு ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் நடைபெறும். (த-162)

★ ★ ★

ஆங்கில மொழிப் போதனைப் பாடநெறியில் பட்டப்பின் டிப்ளோமா/டிப்ளோமா ஆகியவற்றுக்கான பிரவேசப் பரீட்சை இன்று காலை 10 மணிக்கு யாழ் பல்கலைக் கழக பழையநூலகக்கட்டடத்தில் நடைபெறும். (க)

## ஆசிரிய கலாசாலை வினாத்தாள்கள்

யாழ்ப்பாணம், டிச, 9

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இறுதியாண்டு பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று யாழ். கல்வி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தன.

இப்பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறும். (ஒ-3)

## எண்பதாயிரம் பேருக்கு வெள்ள உணவு நிவாரணம்

அண்மையில் பெய்த பெரு மழையினால் யாழ். மாவட்டத்தில் 18 ஆயிரத்துக்கு மேலான குடும்பங்களைச் சேர்ந்த 80ஆயிரத்துக்குமேலானோர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும்—

பாதிக்கப்பட்டவர்களுக்கு சமைத்த உணவும் ஒருவாரத்துக்கான உலர் உணவும் பிரதேச செயலர்கள், கிராம சேவையாளர்கள் ஊடாக வழங்கப்பட்டு வருவதாகவும் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவித்தார். (க-162)

## இலங்கையில் எய்ட்ஸ் நோய்

## அடுத்த 3 ஆண்டுகளில் ஆயிரத்தைத் தாண்டும்

கொழும்பு, டிச. 9

நாட்டில் அடுத்த மூன்று ஆண்டுகளில் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டிவிடும்.

பால்வினை நோய்த்தடுப்புத்திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் காமினி ஜயகுரு இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் எய்ட்ஸ் தொற்றும் நோயாக மாறி வருகிறது என்றும் அவர் எச்சரித்தார்.

சர்வதேச ஏஜன்சிகள் உதவிகளைக் குறைத்துள்ளதால், எய்ட்ஸ் தடுப்பு பிரசாரங்களில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டில் நாட்டில் 77 எய்ட்ஸ் நோயாளர்கள் இருந்தனர் என்றும்—

இந்த எண்ணிக்கை கடந்த நவம்பர் மாதம் வரை 118 ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

ஆரம்பக் கட்டத்தில் எய்ட்ஸ் வைரஸ் காவிகளின் எண்ணிக்கை 3ஆயிரத்து 500முதல் 4ஆயிரமாக இருந்தது என்றும—

1997இல் ஆயிரம் பேருக்கு எய்ட்ஸ் நோய் ஏற்படும் போது அதன் வைரஸ் காவிகளின் எண்ணிக்கை 12ஆயிரமாக இருக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

## சித்தவைத்திய அபிவிருத்தி பல்கலைக்கழகத்தின் கடமை

### துணைவேந்தர் துரைராசா உரை

''தமிழர் வைத்தியமான சித்த வைத்தியத்தை அபிவிருத்தி செய்வது எமது பல்கலைக் கழகத்தின் கடமைகளில் ஒன்றாகும்.''

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா.

இலங்கா சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றத்தினரின் சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தை துணைவேந்தர் அண்மையில் திறந்து வைத்தார்.

அங்கு பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது;

''இந்த நிலையத்தில் பயிற்சி பெறுவோர் சித்த வைத்தியத்துக்கும் எமது மக்களுக்கும் சிறந்த சேவை ஆற்றுவார்கள் என நம்புகிறேன். யாழ். பல்கலைக் கழகம் இதற்கு உதவியும் ஒத்துழைப்பும் வழங்கும்.''

மன்றத் தலைவர் வைத்தியப் பேரறிஞர் திரு. க. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட உடற்தொழிலியல் துறைத் தலைவர் பேராசிரியர் சு. வ. பரமேஸ்வரன் பேசுகையில், ''வைத்திய பீட மாணவர்களும் மூலிகை ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். சித்த மருத்துவர்களும் இங்கு வைத்திய ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். இந்த நிலையத்தினரும் பல்கலைக் கழகத்தினரும் வைத்திய ஆராய்ச்சிகளில் ஒருவருக்கொருவர் உதவவும் ஒத்துழைக்கவும் முடியும்'' என்று கூறினார்.

யாழ். பல்கலைக்கழக சமூக வைத்தியத்துறை விரிவுரையாளர் வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியன், சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. தி. சபாரத்தினம், மில்க்வைற் அதிபர் சஞ்சீவி க. கனகராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

வைத்திய கலாநிதி செ. நச்சினார்க்கினியன் மருந்துக் கலையையாளர் பயிற்சியை ஆரம்பித்து வைத்தார். சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கத்தால் வழங்கப்படும் கௌரவப் பட்டச் சான்றிதழ் பேராசிரியர் சு. வ. பரமேஸ்வரனால் வழங்கப்பட்டது. (க)

## நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு பண்டிதர் ஆர். கே. முருகேசு ''கந்தர் அலங்காரத்தில் [illegible] கற்கண்டுச் சுவை'' எனும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

## பிரபாவை இந்தியாவிடம் ஒப்படைக்க முயற்சியாம்!

### அமைச்சர் சவான் சொல்கிறார்

புதுடில்லி, டிச. 9

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கிற்காக விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்கச் செய்ய அரசு முயன்று வருவதாக இந்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் கூறியிருக்கிறார்.

நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் நேற்று அவர் இதனைத் தெரிவித்தார்.

திரு பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பதற்கான முயற்சிகளில் இலங்கை அரசு ஈடுபட்டிருப்பதாகக் கூறிய அமைச்சர் —

இலங்கையில் விடுதலைப் புலிகள் விளைவிக்கும் பிரச்சினைகள் காரணமாக இலங்கை அரசுக்கு இது சிரமமாக உள்ளதாகவும் —தெரிவித்தார்.

பிரபாகரனை ஒப்படைப்பது குறித்து இந்திய வெளியுறவு அமைச்சு இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி, ஜெயந்தி நடராஜன், நாராயணசாமி, வி. என். யாதவ், சங்கர் தயாள் சிங் ஆகியோர் எழுப்பிய கேள்விக்குப் பதில்

## விளையாட்டு நிகழ்வுகள்

லெப் கேணல் மதி ஞாபகார்த்த கிண்ணத்துக்காக மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் 11 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான விளக்கு முறை உதைபந்தாட்டப் போட்டியில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் யங்றோயல் விக அணியை எதிர்த்து ஞானமுருகன் வி.க அணியும் —

பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கண்ணகி வி.க அணியை எதிர்த்து சில்வஸ்ரார் வி.க அணியும் மோதுகின்றன. (த-143)

## இழுவைப் படகுகள் திருத்த வேலை ஆரம்பம்

நெல்லியடி, டிச. 9

சேதமடைந்த இழுவைப் படகுகளை திருத்தும் வேலைகள் பருத்தித்துறை இறங்கு துறைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருத்தும் வேலைகளை யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர். (ஒ-109)

## அரியாலை சுதேசியத் திருநாள்

யாழ்ப்பாணம், டிச 9

அரியாலை 75 ஆவது சுதேசியத் திருநாள், பவள விழா ஆகியவற்றை யொட்டி மாவட்ட ரீதியில் பல போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன.

எறிபந்தாட்டம், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், அஞ்சல் ஓட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன.

இப்போட்டிகளில் பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் தமது விண்ணப்பங்களை நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஒ-3)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 29-12-93 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

தற்காலிக உதவி விரிவுரையாளர்:-

அரசறிவியல்
ஆற்றுகைக்கலை-கர்நாடக சங்கீதம் / வாய்ப்பாட்டு
ஆற்றுகைக்கலை-(நடனம்) பரதநாட்டியம்.

சம்பள அளவுத்திட்டம்:-

31 - 12 - 1993 திகதி வரை ரூபா 4,585/- (நிலையானது) மாதமொன்றிற்கு.
01 - 01 - 1994 இல் இருந்து ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றிற்கு

இத்துடன் நிதுவையிலுள்ள வேலை நிறைவேற்றப்படியாக 1994 டிசம்பர் 31 ஆம் திகதி வரை சம்பளத்தின் 25 சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

1993 மே 12 ஆம் தேதிய 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப்படியாக 500/- ரூபா செலுத்தப்படும்.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/- ரூபாவை நிதிக்கிளையில் செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தில் சிரேட்ட உதவிப் பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும், விவரங்களையும் பெறவிருப்புவோர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக் கட்டளை/தபாற்கட்டளையும் 23X10 ச. மீ. அளவுடைய சுய முகவரியிட்டு 1/- முத்திரை யொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
08-12-1993.

(பி/6672)


## கண்ணீர் அஞ்சலி

### செல்லப்பா கந்தையா

எமது கலாசாலையின் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த

க. சத்தியதாசன் அவர்களின் தந்தை

செல்லப்பா கந்தையா

அவர்களின் மரணச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

விஞ்ஞான பீடம்
பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை,
திருநெல்வேலி.

(28249)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
792/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## அவரைச் சொல்லிக் குற்றமில்லை!

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இலங்கை முழுவதிலும் நடைபெற்று வருகிறது. இம்மாதம் பதினைந்தாம் திகதி வரை பரீட்சை தொடர்ந்து நடைபெறும்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை, மாணவன் ஒருவனின் கல்வித் தகுதிக்குரிய முதற்படியாக அமைகின்றது.

அதனால் அந்தப் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுச் சித்தி அடைந்துவிட வேண்டும் என்ற இலக்குடன் மாணவர்கள் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள். அதற்கேற்ற வகையில் தம்மைத் தயார் செய்கிறார்கள்.

பல வகைகளாலும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பரீட்சை அமைதியான சூழ்நிலையில், வெளித்தொந்தரவுகள் இல்லாமல் நடத்தப்பட வேண்டியது அவசியம்.

இதனை மனதிற்கொண்டு பரீட்சை ஆணையாளர்—

★ பரீட்சை நிலையங்களின் சுற்றாடலில் ஒலி பெருக்கி பயன்படுத்தக் கூடாது.

★ பரீட்சை நிலையங்களுக்கு அருகில் வசிப்போர் தங்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் ஒலியைக் குறைத்துப் பயன்படுத்த வேண்டும்.

★ பரீட்சை நடைபெறும் இடங்களில் தேவையற்ற முறையில் நடமாடுவதை மக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

★ பரீட்சை குழப்பமின்றி நடைபெற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.

— என்று பொதுமக்களைக் கேட்டிருந்தார். நல்லது அவரது கடமை உணர்வும், மாணவர் மீதுள்ள அக்கறையும் மெச்சத் தக்கன.

ஆனால் —

அவரின் அக்கறை முழுக்க முழுக்க தென்பகுதி மாணவர்கள் மீது மட்டுமே என்பதை வெட்ட வெளிச்சமாகக் காட்டி விட்டார்.

பரீட்சை அமைதியாக, மாணவர் மனங்களை குழப்பாமல் நடப்பதற்கு உதவுமாறு பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டவர்—

வடக்கில் பரீட்சைக் காலத்தில் குண்டு வீச்சு, எறிகணை வீச்சுகளை நிறுத்துமாறு கேட்கவில்லை!

வடக்கு-கிழக்கில் யுத்தம் நடக்கிறது. அங்குள்ள மாணவர்கள் போதிய வசதிகள் இன்றிக் கல்வி பயில்கிறார்கள். பாடசாலையிலும் போதிய வசதி இல்லை; வீட்டிலும் உணவு உட்பட பல வசதிகள் இல்லாது போய் விட்டன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் குண்டு வீச்சுக்கும் எறிகணை வீச்சுக்கும் மத்தியில் தான் தமது கல்வியைத் தொடர்கிறார்கள். இந்த நிலைமைகள் பரீட்சை ஆணையாளருக்குத் தெரியாதிருக்க நியாயமில்லை

தெற்கு மாணவரில் அக்கறை கொண்டு ஒலிபெருக்கி பயன்படுத்த வேண்டாம் என்று கோரியவர், வடக்கு மாணவரின் நலன் கருதி பரீட்சை நேரத்தில் குண்டு வீச்சு தாக்குதல்களை நிறுத்துமாறு அரசிடம் கேட்டிருக்க வேண்டுமே! அவர் கேட்கவில்லை! கேட்கமாட்டார்.

குண்டு, எறிகணை வீச்சுகளால் ஏற்படக்கூடிய உயிராபத்துடன், மனப்பதற்றத்துடன் பரீட்சை எழுதுவதை விட, ஒலிபெருக்கித் தொல்லைதான் மாணவர்களின் மனங்களைக் குழப்பும் என்று கணக்குப் போட்டாரோ, என்னவோ!

தமிழர்களை எல்லா வழிகளாலும் ஒடுக்கி, நசுக்கி அவர்களைப் பின் தள்ளிவிட வேண்டும் என்பது அரசின் கொள்கை மட்டுமல்ல. அதன் சேவகர்களான அரச அதிகாரிகளினதும் கொள்கை. எனவே பரீட்சை ஆணையாளரில் குறைகண்டு பயனில்லை. அவரைச் சொல்லிக் குற்றமில்லை.

தமிழர்கள் தமக்கெனத் தனியான அரசு ஒன்று நிறுவினால் மட்டுமே தமிழ் மாணவர் நலன் பேணப்படும். சிங்கள அரசும், அதிகாரிகளும் நடந்து கொள்ளும் விதம் அதனையே வலியுறுத்துகிறது.

# முல்லை., கிளிநொச்சி மாவட்டங்களில் குளங்கள் நிரம்பி வழிகின்றன

## முத்துஐயன்கட்டு உடைப்பெடுக்கும் ஆபத்து

கிளிநொச்சி, டிச. 9

சமீபத்தில் பெய்த பெரும் மழை காரணமாக முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் குளங்கள் நிரம்பி வழிகின்றன.

முல்லை மாவட்டத்தின் மிகப் பெரிய குளமான முத்துஐயன் கட்டுக் குளத்தின் அணைக்கட்டு அரிப்பு ஏற்பட்டு உடைக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது என அறிய வருகிறது.

கடந்த 3ஆம் திகதி இரவு வீசிய சூறாவளியால் அணைக்கட்டோடு நீர் மோதி அரிப்பு ஏற்பட்டுள்ளது. கதவின் இடது பக்க அணைக்கட்டு நீண்ட தூரம் அரிப்பெடுத்து விட்டது. இரண்டு கதவுகள் திறந்து விடப்பட்டு இருப்பினும் நீர் நிலை உயர்கிறது.

இதே வேளை — கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு, கல்மடு, அக்கராயன், புதுமுறிப்பு, கனகாம்பிகை, பிரமந்தனாறு, வன்னேரி, கரியாலை நாகபடுவான் ஆகிய குளங்கள் நிரம்பி வழிகின்றன.

இரணைமடுக் குளத்தில் 30-11-1993 வரையான 51 நாட்களில் 1291.36 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், அக்கராயன் குளத்தில் 30-11-1993 வரையான 38 நாட்களில் 1129.60 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவு செய்யப்பட்டதாகத் தெரிய வருகின்றது. (க)

## கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்ட பால்மா திருப்பி அனுப்பப்பட்டது

கொழும்பு, டிச. 9

கதிரியக்கத்தினால் பாதிக்கப்பட்ட பால்மா வகைகள் திருப்பி அனுப்பப்பட்டன.

15 தொன் எடையான இப் பால்மா வகைகளை நெஸ்லே நிறுவனம் கப்பல் மூலம் தருவித்தது.

துறைமுகத்தில் வைத்து அணுசக்தி ஆராய்ச்சி கமிஷன் அதிகாரிகள் நடத்திய சோதனையின் போது 10 கொள்கலன்களில் தருவிக்கப்பட்ட இப்பால்மா வகைகள் குறிப்பிட்ட அளவுக்கு மேலாக கதிரியக்கத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அந்த பால்மா வகைகளை திருப்பி அனுப்பும்படி நெஸ்லே நிறுவனத்தை சுங்கப் பகுதி பணித்திருந்தது. அதன்படி அவை திருப்பி அனுப்பப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை போலந்தில் இருந்து தருவிக்கப்பட்டிருந்தன. (இ-87)

## கதிரியக்க பால்மா விற்பனையாகலாம்

### சுங்கத் திணைக்களம் எச்சரிக்கை

கதிரியக்கத்தினால் பாதிக்கப்பட்ட பால்மா நாட்டில் உள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு இருக்கக் கூடிய சாத்தியத்தை நிராகரிக்க முடியாது என்று சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பி. வீரசேகரா தெரிவித்தார்.

நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகள் கதிரியக்கப் பரிசோதனைக்கு கடந்த இரண்டு மாதங்களாகவே உட்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

அதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா வகைகள் விற்பனைக்கு விடப்பட்டிருக்கலாம். அவை சுத்தமானவையா என்பதை தம்மால் உத்தரவாதம் செய்ய முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

## எல். டீ. ரி. பரீட்சைக்கு விண்ணப்பித்தோர்

மொறட்டுவ பல்கலைக்கழக தேசிய தொழில்நுட்ப சுராதரப் பத்திர பயிற்சி நெறிக்கு (எல். டீ. ரி.) விண்ணப்பித்திருந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கான அனுமதிப் பரீட்சை சம்பந்தமான பெயர் விவரங்கள் யாவும் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

பெயர் விவரங்களைப் பார்வையிட விரும்பும் விண்ணப்பதாரர்கள் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்பட்டுள்ளது. (இ-87)

## சுதந்திரக்கட்சி உறுப்பினர் தீக்குளிப்பு பயமுறுத்தல்!

கொழும்பு, டிச. 9

தமது வட்டார மக்களின் அடிப்படைத் தேவைகளை கொழும்பு மாநகரசபை நிறைவேற்றாத பட்சத்தில் தீக்குளிக்கப் போவதாக சுதந்திரக்கட்சி உறுப்பினர் திருமதி கலீத்ரா விக்கிரமசிங்கா எச்சரித்துள்ளார்.

அவர் கடந்த 25ஆம்திகதி கொழும்பு மாநகரசபை அலுவலகத்தில் தம்மீது மண்ணெய்யை ஊற்றி தீக்குளிக்க முயற்சித்தார் என்றும்—

அதனைத் தொடர்ந்து அவர் பிரதிநிதித்துவம் செய்யும் பொரளை வட்டாரத்திற்கு ஐந்து நீர் விநியோகக் குழாய்களை பொருத்தும்படி மேயர் உத்தரவிட்டார் என்றும்—

அத்துடன் வட்டாரத்துக்குத் தேவையான மலாலகூட வசதிகளை விரைவில் செய்து தருவதாக அவருக்கு உறுதியளிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

உறுதி மொழி நிறைவேற்றப்படாத பட்சத்தில் மீண்டும் தீக்குளிக்கப் போவதாக அவர் எச்சரித்துள்ளார்.

சுதந்திரக்கட்சி எம். பி. நிமால் சிறிபால டீ சில்வா பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் தமது வட்டார அபிவிருத்திக்கு 5 லட்சத்து 52 ஆயிரம் ரூபா ஒதுக்கியிருந்தும்—

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவரின் எதிர்ப்பால் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் திருமதி விக்கிரமசிங்கா குற்றஞ்சாட்டியுள்ளார்.

சோமாலி நாட்டின் கதாநாயகனான

## போராளி தளபதி அய்டீட் முன்னர் இலங்கைத் தூதர்!

கொழும்பு, டிச. 9

சோமாலி நாட்டின் இன்றைய கதாநாயகனான பிரபல போராளித் தளபதி முஹம்மது பாரா அய்டீட் சோமாலியின் இலங்கைத் தூதராக 1984 முதல் 1988 வரை பணியாற்றினார் என்று அறிவிக்கப்படுகின்றது.

புதுடில்லியில் சோமாலியின் இந்தியத் தூதராக பணிபுரிந்து கொண்டு அவர் இலங்கை மற்றும் சிங்கப்பூர் நாடுகளின் சோமாலித் தூதராக பணியாற்றினார் என்றும்—

தமது நியமனப்பத்திரங்களைக் கையளிப்பதற்காக ஜெனரல் அய்டீட் 1986 டிசம்பரில் கொழும்பு வந்திருந்தார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

சோமாலி நாட்டில் ஐ. நாவின் 29 ஆயிரத்து 999 பேரைக் கொண்ட அமைதிப் படையை எதிர்த்து ஜெனரல் அய்டீடின் தலைமையிலான போராளி அமைப்பு போராடி வருவது தெரிந்ததே. (ஒ-எ)

பூநகரித் தாக்குதல்:

## நாற்பது சிவில் ஊழியர்கள் பற்றித் தகவல் இல்லை

கொழும்பு, டிச. 9

விடுதலைப் புலிகள் பூநகரி முகாமைத் தாக்கியபோது அங்கு பணியாற்றிய 50க்கும் அதிகமான சிவில் ஊழியர்களில் சுமார் 40 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். அல்லது காணாமல் போயுள்ளனர்.

இவர்களைப் பற்றி உத்தியோகபூர்வமான தகவல் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை. இதனால் இவர்களின் உறவினர்கள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர் என்று தென்னிலங்கை சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (க 6)

## ரகசிய வங்கிக் கணக்கு; ரத்துச் செய்ய அரசு முடிவு

கொழும்பு, டிச. 9

கறுப்புப் பணத்தை வெளிக்கொண்டு வருவதற்காக கடந்த ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்தினால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட இரகசிய வங்கிக்கணக்கு வைக்கும் திட்டத்தை ரத்துச் செய்து விடுவது என தற்போதைய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி ''சண்டே ரைம்ஸ்'' இத்தகவலை வெளியிட்டது

அடுத்த ஆண்டு முற்பகுதியில் இருந்து இத்திட்டம் ரத்துச் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது

திட்டம் ரத்துச் செய்யப்பட்ட பின்னர், திட்டத்தின் கீழ் திறக்கப்பட்டுள்ள இரகசியக் கணக்குகளை மூடுவதற்கு வாடிக்கையாளருக்கு கால அவகாசம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ரகசிய வங்கிக்கணக்கு முறையால் நாட்டுக்கு எதிர்பார்த்த நன்மையிலும் பார்க்க பாதகமே ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

# திருமலையை விழுங்கும் சிங்களக் குடியேற்றம்

## ஆரவாரமின்றி மெது மெதுவாக நடக்கிறது

''குரைகடலோதம் நித்திலங் கொழிக்கும் கோணமாமலை அமர்ந்தாரே'' என்பது சம்பந்தரது பாடல். திருகோணமலை என்றதும் எவருக்கும் இரண்டு விடயங்கள் நினைவுக்கு வரும். ஒன்று; கோணேஸ்வரம். மற்றையது; கன்னியா வெந்நீருற்று.

ஒரு மாலைப் பொழுதில் இந்தக் கோணேஸ்வரத்தின் உச்சியில் நின்று தொலை தூரத்தே பிறிமா ஆலையிலிருந்தும் துறைமுகத்தில் தரித்து நிற்கிற கப்பல்களிலிருந்தும் நட்சத்திரங்களைப் போல் கண் சிமிட்டுகிற மின் விளக்குகளையும், கீழே ஒவென்ற பேரிசைச்சலுடன் பாறைகளுடன் மோதி எழும் அலைகளையும் பார்த்துக் கொண்டே இருப்பதென்பது ஒரு சுகானுபவம்தான்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் முதன்முறையாக திருமலை சென்ற போது கிடைத்த அனுபவம் இப்படித்தான் இருந்தது.

ஆனால் 83 இனப் படுகொலையின் போது கோணேஸ்வரர் கோயிலுக்குப் போகிற வழியில் கோட்டை வாயிலில் இருந்த பிள்ளையார் சிலையை கடலில் தூக்கி வீசி விட்டு 'கணதெய்யோ நண்டயோ' (கணபதி தெய்வம் குளிக்கப் போய் விட்டார்) என்று சிங்களக் காடையர்கள் சுவரில் எழுதினார்கள் என்கிற செய்தியைத் தான் 84 இல் திருமலை சென்ற போது அறிய முடிந்தன.

### ஆட்டு மந்தைக்குள் நுழைந்த ஓநாய்

'ஆட்டு மந்தைக்குள் நுழைந்த ஓநாயைப் போல' ஸ்ரீலங்கா அரசு இராணுவம் கோணேஸ்வரர் கோயிற் கோட்டைக்குள் நுழைந்திருந்தது கோணேஸ்வரர் கோயிலுக்குப் போவதற்கான கெடுபிடிகள் ஆரம்பமாகி இருந்தது.

86 இல் வழிபாட்டுக்காக கோணேஸ்வரர் கோயிலுக்குப் போவது தடை செய்யப்பட்டிருந்தது.

கோயிலுக்குப் போகிற வழியில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இதே காலப்பகுதியில் கோணேஸ்வரர் ஆலயம் இருந்த மலையில் மிகப் பெரிய புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டது; கோணேஸ்வரரை மறைக்குமாப் போல.

ஏற்கனவே திருமலை மாவட்டத்தின் எல்லைப் புறங்களில் உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் மிக வேகமாக திருமலையை விழுங்கிக் கொண்டு வந்தன. இந்தக் குடியேற்றங்கள் 1946 இல் 21% மாக இருந்த சிங்கள மக்களின் விகிதாசாரத்தை 1981 இல் 33.62 வீதமாக ஏறத்தாழ தமிழ் மக்களின் விகிதாசாரா அளவிற்கு உயர்த்தியிருந்தன.

83 இனப்படுகொலையை அடுத்து பெருமளவான தமிழ் மக்கள் தமது வீடுகளையும், நிலபுலங்களையும் விட்டு அகதிகளாக இடம் பெயர்ந்தார்கள். இடம் பெயர்ந்தவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. தொடர்ந்த இராணுவக் கெடுபிடிகளினால் பன்குளம், சுந்தளாய், தம்பலகாமம் போன்ற பல்வேறு பகுதிகளிலிருந்த தமிழ் மக்களால் பயிர் செய்யப்பட்டு வந்த நிலங்கள் சிங்களமயமாகிக் கொண்டு வந்தன. இந்நிலைமைகளை வளர்த்துச் செல்வதில் அரசு பிரதான பங்கு வகித்து வந்தது.

88ஆம் ஆண்டு இந்தியப் படை வந்திருந்தது.

திருகோணமலை முற்றவெளியில் மிகப்பெரிய முகாம் ஒன்றைப் போட்டிருந்தார்கள்.

வழிபாட்டுக்காகக் கோணேஸ்வரம் திறந்து விடப்பட்டிருந்தது.

ஆனால், அரச படையினர் இன்னமும் கோட்டைக்குள் அடங்கி இருந்தார்கள்.

எண்பதுகளில் நகரைச் சூழ உருவாக்கப்பட்டிருந்த சிங்களக் குடியேற்றங்களில் பெருமளவானவை இந்தியப் படை வருகையின் பின் விலக்கப்பட்டிருந்தன.

காலம் காலமாக தமது வீடுகளையும், நிலங்களையும் இழந்திருந்த தமிழ் மக்கள் ஏழெட்டு வருடங்களுக்குப் பிறகு முதன்முறையாகத் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினார்கள்.

இவ்வளவு காலமும் சிங்களவர்களால் அபகரிக்கப்பட்டிருந்த அவர்களது வீடுகள் மீளவும் அவர்களுக்குக் கிடைத்தன. இவ்வளவு காலஅகதி வாழ்க்கைக்கும் ஒருவாறு முற்றுப்புள்ளி வைத்த தாயிற்று என்று பெரு மூச்சு விடுவதற்குள் 90 இல் மீண்டும் ஆரம்பமான யுத்தம் அவர்களை விரட்டியது.

திரும்பவும் அகதிகளானார்கள்.

### மிக வேகமான சிங்களக் குடியேற்றங்கள்

அரசும் படைகளும் துணை நிற்க புத்த பிக்குகளின் தலைமையில் சிங்களக் குடியேற்றங்கள் மிக வேகமாக முளைக்கத் தொடங்கின.

இதுவரை காலமும் நகரை அண்டியும் நகரின் நுழைவாயிலிலும் உருவாக்கப்பட்ட குடியேற்றங்கள் இப்போது நகருக்குள் தமிழ், முஸ்லிம் மக்களது காணிகளிலும், கோயில் காணிகளிலும் என சிங்கள நிலங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. சிங்களக் குடியேற்றங்கள் நகரை மெல்ல மெல்ல விழுங்கிக் கொண்டிருக்கின்றன.

சிங்கள மயமாக்கப்பட்டு வரும் திருகோணமலையில் இலங்கை அரசின் நடவடிக்கைகள் மட்டக்களப்பைப் போல நேரடியாக இராணுவத் தினரால் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. பின்னணியில் இருந்து கொண்டு அரசும், இராணுவமும் பௌத்த மதகுருமார்கள், சிங்கள மக்கள் ஆகியோரைக் கொண்டு நடத்தி வருகின்றன. இது கிளம்பக்கூடிய எல்லா எதிர்ப்புகளையும் இனவாத முலாம் பூசி இலகுவில் முடக்கி விடக்கூடிய விதத்தில் நடத்தப்பட்டு வரும் ஒரு வகைப் புதுமையான சதியென்றே சொல்கிறார்கள் திருமலைத் தமிழ், முஸ்லிம் மக்கள்.

### மரக்கறி வியாபாரம் போக்குவரத்துச் சேவை சிங்களவர் கையில்

திருமலை நகர்ப்புற சந்தையுள் எம்மைச் சந்தித்த மரக்கறி வியாபாரி ஒருவர் தெரிவித்த தகவல்கள் இந்தப் பிரச்சினையைத் தெளிவாக விளக்குகின்றன. ''83கல வரத்துக்கு பிறகு சந்தைப் பக்கம் போக முடியவில்லை. மீன் வெட்டுற கத்தியாலை வெட்டு வாங்கிச் செத்தானம் மோசம். இதாலை தமிழர்களுக்கெண்டு ஒரு ஆளு தான் திருஞானசம்பந்த வீதிச் சந்தை. இப்ப முழுக்க முழுக்க மரக்கறி வியாபாரக் கட்டுப்பாட்டை அவங்கள் எடுத்ததாலை இந்தச் சந்தையை மூடிட்டு பழைய பசாருக்கே போறம்.

சந்தையிலை சாமான் விற்க மட்டும் தான் எங்களுக்கு முடியும். கண்டி போல தூர இடங்களுக்குப் போய் முன்னையைப் போல சாமான் கொண்டு வந்து விற்க எங்களுக்கு ஏலாது. அது முழுவதும் சிங்களாக்களின்ரை கையிலை தான் இருக்குது. தப்பித்தவறி நாங்கள் செய்ய வேலை ''எனப் பின்னாலில் தெரிய வந்தது என்று குறிப்பிடுகிறார் நகரில் கடை நடத்தும் வர்த்தகர்.

### மீன்பிடிக்க அனுமதி வேண்டும்

கடலில் மீன் பிடிக்கச் செல்வதற்கு கூடற்படையினரின் அனுமதியைப் பெறவேண்டும் இப்போதெல்லாம் பெருமளவு படகுச் சொந்தக்காரர்களாகச் சிங்களவர்களே இருக்கின்றார்கள் ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல அனைவருக்குமே தடை இருந்த போதும் அவர்கள் போகும் போது கடற்படை கண்டு கொள்வதில்லை. தமிழ், முஸ்லிம் மீனவர்கள் அதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. தமிழ், முஸ்லிம் மீனவர்கள் கரையோரத்தில் மட்டுமே மீன்பிடிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

''பிடிக்கிற மீனை நாம் சிங்கள முதலாளிகளுக்குத் தான் விற்க வேண்டி இருக்கிறது. நாம் சொந்தமாக நகரத்துக்கு வெளியே எடுத்துச் செல்ல அவங்க விடமாட்டாங்க. மீன்களை வெளியே கொண்டு போய் வியாபாரம் செய்யிற உரிமையை அவங்களே எடுத்திட்டாங்க'' என்கிறார் அவர் வேதனையுடன்.

ஆக போக்குவரத்து, மீன், மரக்கறி வியாபாரம் என்பவற்றுக்காக நகருக்கு வெளியே கொடர்புகொள்வதற்கான உரிமை தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மறுக்கப்பட்டு வருவது அங்கு இப்போது அங்கீகரிக்கப்பட்ட ஒரு விடயமாகப் போய்விட்டது.

''இதற்கெல்லாம் அரசாங்கம் ஒண்டும் செய்வதில்லையா? நீங்கள் பொலீஸில் முறைப்பாடு செய்யவில்லையா? என்று கேட்டோம் நாம்.

ஒரு விசித்திரமான மவிதனை பார்ப்பது போலப் பார்த்தார் அந்த மீனவர். பிறகு ஒரு மெல்லிய சிரிப்புடன் இவ்வாறு சொன்னார். ''அவங்களே பின்னுக்கு நிண்டு செய்யேக்கை நாங்கள் அவங்கவிட்டை சொல்லி என்ன பிரயோசனம்?... எங்கட ஆக்களுக்கு ஒரு சரியான ஆள் இல்லை...

''இங்குள்ள தமிழ் விடுதலை இயக்கங்களிடம் இது பற்றிச் சொல்லவில்லையா'' என்று இன்னொருவரைக் கேட்டோம்.

''அவங்கட பாட்டைப் பார்க்கவே அவங்களுக்கு ஏலுமோ தெரியேல்லை'' என்றார் அவர் விரக்தியுடன்.

### சோதனை மேல் சோதனை

மட்டக்களப்புக்கும், திருமலைக்கும் ஒரு சின்ன வித்தியாசம். அங்குபோல நகருக்கு வெளியிலுள்ள கிராமங்களில் உள்ள மக்கள் நகரில் வந்து சாமான்கள் வாங்கிச் செல்வதற்கான பட்டியலை தேடியாகவே இராணுவ அதிகாரிகளிடம் கொண்டுபோகத் தேவையில்லை. தமக்குத் தேவையான பொருள்களுக்கான பட்டியலை அவர்கள் தம்மூர் கிராம சேவகரிடமே கொடுத்து விடலாம். அவரது 'பரிந்துரை'யுடன் அது அவர் மூலமாக இராணுவத்திடம் போகும். இராணுவ அதிகாரிகளின் 'அப்புறூவல்'இன் பின் அப்பட்டியல் திரும்பவும் கிராம சேவகரிடமாக அதனைக் கொடுத்தோரிடம் வந்து சேரும். அப்பட்டியலில் உள்ள பொருள்களை மட்டுமே அவர் நகரத்திலிருந்து வாங்கிக்கொண்டு திரும்ப முடியும். பட்டியலுக்குச் சற்று அதிகமாக நகரத்தில் இருந்து வரும் சிரமத்திற்காக ஒருவர் வாங்கிச் சென்றால் அவர் முஸ்லிம் ஆயினும் சரி, தமிழராயினும் சரி உடனடியாகப் புலிக்கு சாமான் கொண்டு செல்பவராகச் சந்தேகிக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றார். நகரைவிட்டு வெளியேறும் பாதை (மட்டிக்களி றோட்)யில் வைத்து பலத்த சோதனை நடக்கிறது. கிராமங்களிலிருந்து நகருக்கு வருகின்ற ஒவ்வொருவரது பாரமும் சோதிக்கப்படுகின்றன. திரும்பிப் போகிவாரது பட்டியல்களும் சாமான்களும் 'செக்' பண்ணப்படுகின்றன.

கிராமங்களுள் மக்களின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வர்த்தகம் அனைத்தும் சிங்களவர் வசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### சொக்கலிங்கம் பூபாலசிங்கம்

வேலணை கிழக்கு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சொக்கலிங்கம் பூபாலசிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், புஸ்பநேசன் (ஜேர்மனி), புஸ்பகலா, புஸ்பகரன், புஸ்பபாலினி, புஸ்பதீசன், புஸ்பலோசனி ஆகியோரின் அன்புத் தந்தையும், யாழ்ப்பாணம் ஒட்டு மடத்தைச் சேர்ந்த சொக்கலிங்கம் செல்லம்மாவின் அன்பு மகனும், வேலணை அம்பலவாணர் ஆச்சிமுத்துவின் அன்பு மருமகனும், இராசநாதனின் அன்பு மாமனாரும், லவன், சஞ்சயன், யனிதா, ஆகியோரின் அன்பு பேரனும், சிவபாக்கியம், முத்துக்குமாரு, நாகேஸ்வரி, மரியாபரணம், பூபதி, செல்வராசா, ஆகியோரின் அன்புச் சகோதரனும், புவனேஸ்வரி, சண்முகரெத்தினம், காலஞ்சென்ற புனிதவதி ஆகியோரின் அன்பு அத்தானுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (9-12-93) 40, செழியன் ஒழுங்கை ஒட்டுமடத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இராஜேஸ்வரி
(மனைவி)

40, செழியன் ஒழுங்கை.
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம். (28351)

### தேவசகாயம் பொன்னுத்துரை மாகிறேட்

தேவசாயம் பொன்னுத்துரை மாகிறேட் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற தேவசகாயம் பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அகஸ்ரின் கோபாலி - மரியம்மா அவர்களின் அன்பு மகளும் பூஸ்ரெலா (மல்லிகா), வெஸ்லி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அரிய நாயகம் அவர்களின் அன்பு மாமியாரும், சகோதரனின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09 - 12 - 93) பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி அறியத்தருகின்றோம்.

தகவல்:
மா. அரியநாயகம்
(மருமகன்)

20/1, செபஸ்ரியன் றோட்,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். (28847)

### திருமதி முருகையா இரத்தினம்மா

திருமதி மு. இரத்தினம்மா காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற இ. முருகையா (கிளாக்கர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் - சறோஜினிதேவி, திருமதி சசிதானந்தம் - சுகுணாதேவி, மு. சிவநேசன் (சவிதாஸ் புடைவையகம், கிளிநொச்சி), திருமதி வசந்தன் - கௌசலாதேவி, மு. குகநேசன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (9-12-1993) நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
மு. சிவநேசன்

கந்தரோடை,
கன்னாகம். (28348)

### செல்லர் இளையதம்பி

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம் வீரம்புளியடியைச் சேர்ந்த செல்லர் இளையதம்பி (சின்னத்துரை) 6 - 12 - 1993 திங்கட்கிழமை புங்குடுதீவில் காலமானார்.

அன்னார் செல்லர் தம்பதிகளின் அன்பு மகனும், சிற்றம்பலம் சுந்தரி தம்பதிகளின் அன்பு மருமகனும், விசாலாட்சியின் அன்புக் கணவரும், பாக்கியநாதன் (சுவிஸ்), சரஸ்வதி, நவமணி, காலஞ்சென்றவர்களான பூபதி, சச்சிதானந்தன் மற்றும் பத்மநாதன் (ஜேர்மனி), நடேசன் (சுவிஸ்), சிறிநாதன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மலிங்கம், நாகரட்னம், வரதலட்சுமி புவனேஸ்வரி சிவனேஸ்வரி, விசயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் சமக்கிரியைகள் 7 - 12 - 1993 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்லத்துரை தர்மலிங்கம்

33/1, செல்லா வீதி,
முத்திரைச் சந்தை, யாழ்ப்பாணம். (28343)

### சின்னத்தம்பி நாகேஸ்வரி

நந்தாவில், கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி நாகேஸ்வரி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி (Accountant) யின் அன்பு மனைவியும், திருமதி கணேசமூர்த்தி சிவயோகசுந்தரி, திருமதி அருளாலந்தம் சிவமோகினி, ஆனந்தகுமாரசாமி சிவமனோகரி, காலஞ்சென்ற சிவயோகராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலேஸ்வரி, கணேசபிள்ளை, கனகசுந்தரி, சண்முகநாதன், காலஞ்சென்றவர்களான மகாதேவன், சண்முகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுந்தரேசன், காயத்திரி, அனோஜன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் இன்று (09 - 12 - 93) முற்பகல் 11 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
G. சந்திரேசன்

இந்திர வாசா,
கொக்குவில். (28350)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிரைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 09-12-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## இந்தியாவிலும் நிலநடுக்கம்

புதுடில்லி, டிச. 9

இந்தியாவில் மகாராஷ்டிரம், கோவா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் பல பகுதிகளில் நேற்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஐந்து வினாடிகள் நீடித்தது.

மகாராஷ்டிர மாநிலத்தில் தனது வீடு நிலநடுக்கம் காரணமாக ஆடுவதைக் கண்ணுற்ற 75 வயதான பெண் ஒருவர் அதிர்ச்சியில் உயிரிழந்தார். இதனைத் தவிர வேறு உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை.

## யாழ் நகர...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழுந்து வெடித்தது. அங்குள வீடு ஒன்றில் படித்துக் கொண்டிருந்த க. ஞானசீலன் (வயது 16) என்ற இளைஞர் காயமடைந்தார்.

காயமடைந்த இருவரும் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

பலாலி மற்றும் மண்டைதீவுப் பகுதிகளில் இருந்தே ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## தமிழ் முஸ்லிம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தத்தைப் பூரணமாக நிறுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தையில்கவனஞ் செலுத்துவது சுதந்திரக் கட்சியின் நோக்கம் அல்ல என்பது, நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் விநியோகிக்கப்பட்ட கட்சி அறிக்கையில் இருந்து தெரியவந்ததாக பி. பி. ஸி. கூறியது.

விடுதலைப் புலிகள் ஆயுதமேந்திய வண்ணம் இருக்கும் வரை அவர்களை இராணுவ ரீதியில் கட்டுப்படுத்துவது இராணுவத்தின் கடமையாகும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ-6)

## நாடெங்கும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கம் அரசிடம் கிடையாது.

இதேவேளை இராணுவத்தில் உள்ள சில அதிகாரிகள் மோசடிகளிலும் தவறான செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர்.

வடக்கு கிழக்கு யுத்தம் ஜனாதிபதி விஜேதுங்காவின் அரசுக்கும் அரசுடன் சம்பந்தப்பட்ட வர்த்தகப் பெருச்சாளிகளுக்கு பெரும் லாபத்தைக் கொடுக்கும் பெரும் ஊற்று வாயாகிவிட்டது — இவ்வாறு அவர் தெரிவித்தார்.

திருமதி சந்திரிகா குமாரணதுங்கா சொன்னதாவது:- பத்தாண்டு கால இனப்போர் குறித்து இராணுவத்தினர் விரக்தியடைந்து விட்டனர். மேல மாகாணத்தில உள்ள படையினரிடம் கேட்டால், அவர்கள் தயவுசெய்து இப்போரை முடிவுக்குக் கொண்டு வரும்படி கூறுகின்றனர்.

இராணுவத்தில் சேர்வதற்கு மக்கள் மறுத்து வருகின்றனர். இது வரை கமார் 10 ஆயிரம் படையினர் இராணுவத்தை விட்டு விலகியுள்ளனர்.

இந்த யுத்தத்தை விரைவாக முடித்துக் கொள்ள வேண்டும் என்று படையினர் விரும்புகின்றனர். இந்த யுத்தம் காரணமாக பெரும் பாலான சிப்பாய்களுக்கு எரிந்திகா தெரிவித்தார். (ஒ-எ-6)

## திருமலையை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடமாட்டம் கூட நன்கு கண்காணிக்கப்படுகிறது அயலூர் வாசியாயினும் சரி, ஒருவர் அடிக்கடி இன்னொரு கிராமத்துக்கு போய்வருவார் என்றால் அவர் புலிகளுக்கு தகவல் கொண்டு செல்பவராகச் சந்தேகிக்கப் படுகின்றார். அதன் பின் வழமையான அடி, உதை விசாரணைகள்.

### அத்துமீறல் காணி பறிப்பு

சிங்களமயமாக்கலின் முக்கியமான அம்சமாக ஆங்கு தொழிற்படுவது நிலப்பறிப்புத்தான். இந்துக் கோவில்களுக்கு பள்ளிவாசல்களுக்குச் சொந்தமான நிலங்களில் சிங்களக் குடியிருப்புள் அதன் மீது நடத்தப்படுகின்றன. பொலீஸ், இராணுவம் என்பவற்றின் பின்பலத்துடன் நடத்தப்படும் இவற்றை பௌத்த மத குருக்கள் முன் நின்று நடத்துகின்றார்கள்.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் சிங்கள அரசு ஆயுதமாகவும், திட்டமிட்ட முறையிலும் திருகோணமலை நகரையும் அதன் இயற்கைத் துறைமுகத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கி வருகின்றமிட்டுக் கொண்டிருக்கிறது.

(நன்றி: [illegible])

# அமைச்சர் தொண்டமானும் என் உறவினரே!

## இப்படிக் கூறுகிறார் காமினி

கொழும்பு, டிச. 9

''அமைச்சர் தொண்டமானும் என் உறவினர்தான்'' — ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் தலைவர் காமினி திசாநாயக்கா ''சண்டே டைம்ஸ்''க்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார்.

மத்திய மாகாண முதலமைச்சர் டபிள்யு. எம். பி. திஸநாயக்காவுக்கு (ஐ.தே.க) திராக காமினி திசாநாயக்க நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்.

இம்மாதம் 21,22 ஆம் திகதிகளில் மத்திய மாகாணசபைக் கூட்டத்தில் இப்பிரேரணை விவாதத்துக்கு வருகிறது.

இது குறித்து 'சண்டே டைம்ஸ்'' செய்தியாளர் காமினியை பேட்டி கண்டார்.

சொந்த மாமனாருக்கு எதிராக ஏன் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருகிறீர்கள் — என்று செய்தியாளர் கேட்டதற்கு —

உறவுமுறை சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல இது. உண்மையில் எமது உறவுமுறை பற்றி உங்களுக்குத் தெரியாது. கொத்மலையில் உள்ள பலரும் என் உறவினர்களே. ஏன் தொண்டமான் கூட எனது உறவினரே'' — என்று காமினி திசாநாயக்கா கூறினார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை வெல்லும் என்று எண்ணுகிறீர்களா? — என்ற கேள்விக்கு —

''பிரேரணையின் வெற்றி ஊகத்துக்குரிய விஷயம் அல்ல. தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் இது. பிரேரணை வெற்றிபெற்றால் முதலமைச்சர் ராஜினாமாச் செய்வார்'' — என்றும் காமினி தெரிவித்தார். (ஒ-எ)

## றோயல் கல்லூரியில் 25 பேர் 4'ஏ'யுடன் சித்தி

### கொழும்பு இந்துவில் 106 பேர் தகுதி

கொழும்பு, டிச. 9

கடந்த ஆகஸ்டில் நடந்த ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சையின் பெறுபேறுகளின்படி கொழும்பு இந்துக் கல்லூரியில் இருந்து 106 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இக்கல்லூரி மாணவரான சிவதாசன் பொறியியல் பிரிவில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார். கணித பாடநெறியில் 3 மாணவர்கள் 4 ஏ பெற்றுள்ளனர். வர்த்தகத்தில் ஒருவர் 4 ஏ பெற்றுள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் 25 மாணவர்கள் 4 'ஏ' பெற்றுள்ளனர். விசாகா மகளிர் வித்தியாலயத்தில் 10 பேர் 4 'ஏ' பெற்றுள்ளனர்.

இதேவேளை — வத்தளை புனித அந்தோனியார் கல்லூரி தமிழ்ப்பிரிவு மாணவர்களில் பரீட்சைக்குத் தோற்றிய சகல மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

## 220 பயணிகளுடன் இன்று கோமாரி கப்பல் வரும்

வடமராட்சி, டிச. 9

220பயணிகளுடன் கோமாரி கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பயணிகளில் அதிகமானோர் பல்கலைக்கழக மாணவர்களாவர். ஏனையோர் அரச ஊழியர்கள்.

திருகோணமலையிலிருந்து இப்பயணிகளை ஏற்றிவரும் இக்கப்பல் ஒரு தொகுதி பயணிகளை பருத்தித்துறையில் இருந்து ஏற்றிக்கொண்டு திருகோணமலை நோக்கி இன்றே திரும்பும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-173)

## மன்னாரில் மீளக் குடியமர்வு

யாழ்ப்பாணம், டிச. 9

மன்னார் பெரு நிலப்பரப்பில் இராணுவம் வெளியேறிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியேறி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தொண்டாவுக்கு வரவேற்பு

தொண்டமானை வரனேற்கிறோம். அவருக்காக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கதவுகள் திறந்தே உள்ளன.

ஜனநாயகஐக்கியதேசிய முன்னணியின் பொதுச் செயலாளரும் வடமேல்மாகணா முதலமைச்சருமான ஜி எம் பிரேமச்சந்திரன் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''தொண்டமான் ஒரு பரிசுத்தமான அரசியல்வாதி. ஒவ்வொரு தேர்தலிலும் ஐக்கிய கோரியக் கட்சி அவரால் தான் வெற்றியீட்டியது. இப்போது ஐக்கிய தேசியக்கட்சி அவர் மீது சேறு வாரி வீசுகிறது.

தொண்டமான் சரியான நேரத்தில்சரியானநகர்த்தலில் ஈடுபட்டுள்ளார்'' — என்றும் திரு. பிரேமச்சந்திரா தெரிவித்தார். (ஒ-எ)

## ஸ்ரீலங்கா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் அரசியல் அந்தஸ்தை மேம்படுத்தப் போராடுவதை பயங்கரவாதம் என்று வர்ணித்து, அவர்களுடன் பேசுவதற்கு ஸ்ரீலங்கா அரசு நிபந்தனை விடும் நிலைப்பாட்டுக்கு எதிராகவே வெளி நாடுகளில் பிரசாரம் செய்யப்பட இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

அரசு சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் இந்த நடவடிக்கை குறித்து, வெளியுறவு அமைச்சு திறமையின்மை காரணமாகவோ அல்லது தெரியாத்தனமாகவோ கவனிக்காது இருப்பது துரதிஷ்ட வசமானது என்றும் ''சண்டே ஐலண்ட்'' கருத்து வெயிட்டுள்ளது. (அ-எ)

## உயர்தர பரீட்சை பெறுபேறுகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தப் பாடசாலையிலேனும் எந்த மாணவரும் 4 ஏ தரத்தில் சித்தி பெறவில்லை.

இம்முறை ஒவ்வோரு துறையிலும் மாணவர்கள் மாவட்ட ரீதியிலும், அகில இலங்கை ரீதியிலும் பெற்ற இடம் (Rank) கணணி மூலம் கணிக்கப்பட்டுக் குறிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலையில் முற்கொண்டுகிடைத்த பெறுபேறுகளின் விவரங்கள் வருமாறு -

### யாழ் இந்து

பொறியியல் - 4 ஏ இருவர் (சி. சுஜிதரன்-இவர் மாவட்ட மட்டத்தில் முதல் இடம்-பெற்றார்; பி. விசாகன்), 3 ஏ பி மூவர், 2 ஏ 2 பி ஆறு பேர், ஏ 2 பி சி மூவர், 2 ஏ பி சி இருவர்.

உயிரியல்:- 3 ஏ பி ஒருவர் (அ மீனாட்சிசுந்தரம் இவர் மாவட்டத்தில் முதல் இடம் பெற்றுள்ளார்) 2 ஏ 2 பி, 2 ஏ பி சி, ஏ 2 பி சி, ஏ பி 2 சி தலா ஒருவர், ஏ 3 பி இருவர்

வர்த்தகம்:- 4 ஏ ஒருவர் (சி. சண்முகதாஸ்) 2 ஏ பி சி ஒருவர் ஏ 3 பி ஒருவர், ஏ 2 பி சி இருவர்

கலை:- 3 பி சி ஒருவர்

### இந்து மகளிர்

உயிரியல்:- ஏ பி 2 சி, ஏ 3 சி தலா ஒருவர், ஏ பி 2 எஸ் இருவர், பி 3 சி நால்வர் 2 பி 2 சி நால்வர்

பொறியியல்:- ஏ 3 பி, 3 பி சி தலா ஒருவர், 4 பி இருவர்

வர்த்தகம்:- 3 ஏ பி, ஒருவர் (செல்வி பரமேஸ்வரி-இவர் மாவட்டத்தில் நான்காவது இடம் பெற்றுள்ளார்) ஏ 2 பி சி மூவர்

கலை:- 2 ஏ பி சி ஒன்பது பேர், ஏ 2 பி சி 10 பேர்

### சென். ஜோண்ஸ்

பொறியியல்:- 3 ஏ பி இருவர், 2 ஏ பி சி ஒருவர், ஏ 3 பி நால்வர், ஏ பி 2 சி மூவர்

உயிரியல்:- 3 ஏ பி மூவர், 3 ஏ சி இருவர், 2 ஏ 2 பி இருவர் ஏ பி 2 சி ஒருவர்

வர்த்தகம்:- ஏ 2 பி சி இருவர்.

### சென். பற்றிக்ஸ்

பொறியியல்:- 3 ஏ பி, 2 ஏ 2 சி, ஏ பி 2 சி தலா ஒருவர்.

உயிரியல்:- 3 பி சி ஒருவர்.

வர்த்தகம்:- 2 ஏ பி சி, 3 பி சி தலா ஒருவர்.

### கொக்குவில் இந்து

(செல்லையா சிவானந்தன்)

ஏ 2 பி சி நால்வர், ஏ பி 2 சி இருவர், 2 ஏ 2 பி, 2 ஏ பி சி, பி 2 சி எஸ், பி சி 2 எஸ், பி 3 சி தலா ஒருவர்.

உயிரியல்:- 2 பி சி இருவர், 2 பி 2 சி, பி 2 சி எஸ் தலா ஒருவர்.

வர்த்தகம்:- 3 ஏ சி ஒருவர், 2 ஏ 2 பி ஒருவர், ஏ 2 பி சி இருவர், 2 ஏ சி எஸ் ஒருவர், ஏ பி 2 சி ஐவர், ஏ 2 சி எஸ், ஏ 2 பி சி, ஏ 3 எஸ் தலா ஒருவர், 3 பி எஸ் மூவர், 3 பி சி இருவர், 2 பி 2 சி நால்வர், பி 2 சி எஸ் மூவர், பி 3 சி ஒருவர்

கலை:- 3 பி சி இருவர், 2 பி சி எஸ், ஏ பி சி தலா ஒருவர்.

### சுண்டிக்குளி மகளிர்

பொறியியல்:- 2 ஏ பி சி, ஏ 2 பி சி தலா ஒருவர்.

உயிரியல்:- 2 ஏ 2 பி, ஏ 2 பி சி, 2 பி 2 சி தலா மூவர்.

வர்த்தகம் - 2 ஏ பி சி, ஏ 3 பி, ஏ 2 பி சி தலா மூவர்.

கலை:- 3 ஏ பி சி ஒருவர்.

### கனகரத்தினம் ம. ம. வி.

வர்த்தகம்:- 2 ஏ சி எஸ், ஏ 2 பி சி தலா ஒருவர்.

### வேம்படி மகளிர்

பொறியியல்:- 2 ஏ 2 பி, ஏ 2 பி சி, 2 பி 2 சி தலா ஒருவர், பி 3 சி இருவர்.

உயிரியல்:- 3 ஏ பி ஒருவர், ஏ 2 பி சி நால்வர், ஏ பி சி எஸ் ஒருவர், 3 பி சி மூவர், 2 பி 2 சி இருவர், பி 2 எஸ் இருவர், பி 3 சி ஒருவர்.

வர்த்தகம்:- 3 ஏ பி, 3 ஏ சி, ஏ 2 பி சி இருவர், ஏ பி 2 சி இருவர், ஏ 3 பி, ஏ 3 சி தலா ஒருவர்.

கலை:- ஏ 3 சி இருவர், ஏ 2 பி சி, பி 3 சி தலா ஒருவர்.

### தெல்லிப்பழை மகாஜன

பொறியியல்:- 2 ஏ 2 பி ஒருவர், 2 ஏ பி சி, ஏ பி 2 சி, 2 பி சி எஸ், பி 3 சி தலா இருவர்.

உயிரியல்:- 3 பி சி, 2 பி சி எஸ், பி 3 சி தலா ஒருவர்.

வர்த்தகம்:- 2 ஏ 2 சி, ஏ 3 பி தலா இருவர், 4 பி ஒருவர், ஏ பி 2 சி மூவர், ஏ 2 பி சி நால்வர்.

கலை:- ஏ 2 பி சி இருவர், ஏ பி 2 சி, 3 பி சி தலா ஒருவர் 2 பி சி எஸ் மூவர், 2 பி 2 சி நால்வர்.

### மானிப்பாய் இந்து மகளிர்

பொறியியல்:- 3 சி எஸ் ஒருவர்.

உயிரியல்:- ஏ 2 பி சி, பி சி 2 எஸ், தலா ஒருவர், சி 3 எஸ், இருவர்.

வர்த்தகம்:- ஏ 2 பி சி, ஏ பி சி எஸ் தலா ஒருவர் 2 பி 2 சி இருவர், பி 3 சி எஸ் இருவர், பி 2 சி எஸ், பி சி 2 எஸ், 2 சி 2 எஸ், 3 சி எஸ் தலா ஒருவர், 4 சி இருவர்.

கலை:- பி 2 சி எஸ், 3 சி எஸ் தலா ஒருவர்.

### ஹாட்லி

வர்த்தகம்:- 4 ஏ ஒருவர் (ஜே. ஜெகச்செல்வம் இவர் மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தையும் அகில இலங்கையில் 6 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்), 3 ஏ பி இருவர் ஏ 2 பி சி ஐவர், 2 ஏ 2 பி ஒருவர், 4 பி இருவர்

பொறியியல்:- 3 ஏ பி மூவர் 3 ஏ சி ஒருவர், 2 ஏ 2 பி ஒருவர், 2 ஏ பி சி மூவர், ஏ 3 பி இருவர்

உயிரியல்:- 4 பி, ஏ பி 2 சி தலா ஒருவர், 3 பி சி இருவர்

### உடுத்துறை ம. வி.

கலை:- ஏ 2 பி சி, பி 2 சி எஸ் தலா ஒருவர்

### நெல்லியடி ம. ம. வி

பொறியியல்:- ஏ 2 பி சி ஒருவர், பி 2 சி எஸ் மூவர், 2 பி சி எஸ் ஒருவர்

உயிரியல்:- பி 3 சி, பி 2 சி எஸ் தலா ஒருவர்

வர்த்தகம்:- ஏ 2 பி சி, 3 பி சி, 4 பி தலா ஒருவர், 2 பி 2 சி நால்வர்

கலை:- ஏ 2 பி சி, ஏ பி சி எஸ், 3 பி சி, பி 3 சி தலா மூவர்.

(அ-5-9-173-17-3-109)


## சாவகச்சேரி. ப. நோ. கூ. சங்கம் சாவகச்சேரி.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம் அவர்கள் அறிவுறுத்தலின் பிரகாரம் 1967/1968 கால போக நெற்செய்கை விவசாயக் கடன் தொடக்கம் 1978 சிறுபோக நெற்செய்கை கடன் வரை சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தில் பெற்ற கடனாளிகள் மீதியாகவுள்ள கடன் தொகையை 31-3-94 க்கு முன் முழுதாக செலுத்தினால் எம்மீது வட்டியும் அறவிடப்படமாட்டாது. ஆகவே கடன் மீதியாக செலுத்த வேண்டியவர்கள் சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்துடன் தொடர்பு கொண்டு 31 - 3 - 94 க்கு முன் கடனை மட்டும் செலுத்தவும். செலுத்தும் பட்சத்தில் வரும் காலத்தில் வழங்கப்படும் விவசாயக் கடன்களை பெற உரித்துடையவர்களாகிறீர்கள் என்பதை சங்க பொது முகாமையாளர் அறியத்தருகின்றார்

பொதுமுகாமையாளர்

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம். (பி/6671)

## பதவிகள் வெற்றிடம் தகமை திருத்தம்

08. 12. 93 இல் வெளிவந்த விளம்பரத்தில், பொதுமுகாமையாளர் பதவி இல 7க்கு,

கூட்டுறவு பணியாளர் சம்பளம் இல. 6 என்பது இல. 8 ஆகவும், இல. 7 என்பது, இல. 9 ஆகவும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

கணக்காளர் இல 9ற்கு

கூட்டுறவு பணியாளர் சம்பள இல. 8 என்பது இல. 10 ஆகவும், இல. 9 என்பது இல. 11 ஆகவும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

பொதுமுகாமையாளர்.

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம். (பி/6670)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org